සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை 2011(2012)

# Open / Limited Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Planning Service - 2011 (2012)

(01) கிரகித்தல்

Comprehension

இரண்டு மணித்தியாலம்
Two hours

**எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1.** பின்வரும் தலைப்புக்களுள் **ஒன்றைத்** தெரிந்து ஒரு கட்டுரை எழுதுக.

(i) கனிய எண்ணெய் நெருக்கடியினால் இலங்கைப் பொது மக்கள் மீது ஏற்பட்டுள்ள தாக்கம்.

(ii) இலங்கையில் யுத்தத்திற்குப் பிந்திய சூழ்நிலையும், பொருளாதார அபிவிருத்திக்கான புதிய உபாய வழிகளும்.

(iii) மனித உரிமைகளை மீறுவதனால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பலம் வாய்ந்த உலக நாடுகளின் தலையீடு.

(iv) இலங்கையில் மனித படுகொலைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றால் அற்றுப் போகும் பாரம்பரிய நன்னெறிகள்.

(v) இலங்கையின் சுற்றுலா தொழிலும், தேசிய கலாசாரத்தின் தனித்துவத்தைப் பாதுகாத்தலும்.

(35 புள்ளிகள்)

**2.** பின்வரும் பந்தியை வாசித்து, அதன் சொற்களின் எண்ணிக்கையை **மூன்றில் ஒன்றாகும்** வகையில் பொழிப்பாகத் தருக.

முக்கியமாக அரச துறையின் தனியுடைமையாகப் பேணப்பட்டு வரும் இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி, தொழில் சந்தையின் தேவைக்கு ஏற்றவாறு தரமான கல்வியை வழங்க முடியாமல் இருத்தல் நிலவும் கேள்விக்கு ஏற்றவாறு வழங்க முடியாமல் இருத்தல் ஆகிய விடயங்களினால் பிரச்சினைகளுக்கு உட்பட்டுள்ளது. தனியார் பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தல், வருமானம் குறைந்த மாணவர்களின் உயர் கல்விக்கான வாய்ப்பினை கட்டுப்படுத்தும் எனக் கருதி, பல தசாப்தங்களாக உயர் கல்விக்கான தனியார் துறையின் பங்களிப்புக்குத் தடை ஏற்படுத்தப்பட்டது. எனினும் இலங்கையின் பொதுப் பல்கலைக்கழகங்களின் முறைமையில் போதுமான இட வசதிகள் இல்லாமையின் காரணமாக செலவைத் தாங்கக் கூடியவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதன் விளைவாக பெருமளவு வெளிநாட்டுச் செலவாணி வெளிப்பாய்கின்றது. இப்பின்னணியில் உயர் கல்வியைத் தனியார் துறையினருக்குத் திறந்து விடப்படும் என்பதனை அரசு தெளிவாகத் தெரிவித்திருக்கின்றது. அதன் மூலம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவ வாய்ப்பு வழங்கப்படும். பொருத்தமான சட்டதிட்டங்கள் மற்றும் பட்டப்பாடநெறியைக் கணிப்பீடு செய்து சான்றிதழ்ப்படுத்த தேவையான கொள்கைகளை செயற்படுத்தலின் அடிப்படையிலான பிரபல பல்கலைக்கழகங்களை இலங்கைக்குக் கவருவது மூலம் இப் பல்கலைக்கழங்கங்களுக்கு வெளிநாட்டு மாணவரைக் கவர முடியும். (25 புள்ளிகள்)

**3.** பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்க விடை தருக.

நுண்பாக நிதிகள் துறை சேமிப்பு அமைப்புக்கள், சுழலும் சேமிப்புக் களரிகள், கொடுகடன் அமைப்புக்கள், அந்திய கால அல்லது இறப்புச் சங்கங்கள், சேமிப்புக்களின் ஏனைய பல்வேறு வகைகள், கொடுகடன் களரிகள்/ குழுக்கள் போன்ற பலவகையான அமைப்புக்களை உள்ளடக்குகிறது. "நுண்பாக தொழில் முயற்சியாளர்களுக்குத் தொழிற்படு மூலதனக் கடன்களை குறுகிய காலத்தில் வழங்குவதற்கும் அறவிடுவதற்கும் பயனுறுதி மிக்க பிணையங்களுக்கான பிரதியீடுகளை பயன்படுத்தும் கொடுகடன் முறைமையியல் மற்றும் வறுமை ஒழிப்பு உபாயம்" நுண்பாக நிதி நிறுவனம் எனவும் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. [மிகவும் வறிய மக்களுக்கு உதவும் ஆலோசனைக் குழு 2003 - Consultative Group to Assist the Poorest (CGAP)] தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் நியதிகளில், இது முறை சார்ந்த, வங்கிகள் / நிதியியல் நிறுவனங்களால் பாரம்பரியமாக புறக்கணிக்கப்பட்ட குறிப்பாக வறுமையில் வாழும் மக்கள் உள்ளிட்ட குறைந்த வருமானமுடைய வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்ட கடன்கள், காப்புறுதி, பணவனுப்பல்கள் மற்றும் ஏனைய பணிகள் (மதியுரை மற்றும் தொழில்நுட்பப் பணிகள்) உள்ளடங்கலான பல்வேறு நிதியியற் பணிகளை வழங்குகின்றது. அத்தகைய நுண்பாக நிதி குறைந்த வருமானம் பெறுபவர்களின் வருமான உருவாக்கச் செயற்பாடுகள் மற்றும் இயலளவுகளை

[பக். 2 ஐப் பார்க்க

முன்னேற்றுமெனவும் விரிவாக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மிகவும் பிரபல்யமான மாதிரியாக சுய உதவிக் குழுக்களுடான கடன் வழங்கல் விளங்குகிறது. இம்மாதிரி நுண்பாக நிதித் துறையில் கடன் வழங்குவது போன்றே கடனை மீள அறவிடுவதற்காகவும் இந்தக் குழு முறையியல் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(i) நுண்பாக நிதிகள் துறையில் உள்ளடங்கும் நிறுவனங்கள் யாவை ?
(ii) நுண்பாக நிதியின் பணிகள் யாவை என விளக்குக.
(iii) நுண்பாக நிதிச் செயற்பாடுகளின் பிரதான நோக்கம் எது எனக் குறிப்பிடுக ?
(iv) நுண்பாக நிதி நிறுவனங்கள், நிதி இடை நடுவர்களாக எவ்வாறு செயற்படுகின்றன ?
(v) குறைந்த வருமானமுடையவர்களுக்கு தமது வாழ்க்கை நிலையை மேம்படுத்திக் கொள்ள இதன் மூலம் வழங்கப்படும் வழிகாட்டல் யாது ?

*(15 புள்ளிகள்)*

**4.** பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்க விடை தருக.

தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தெங்கு பயிற்செய்கைச் சபை 2011 இல் தெங்குத் துறையில் அவற்றின் அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டது. தென்மாகாணத்தில் "வெலிகம தென்னோலை வாடல் நோய்" என்ற மாற்ற முடியாத நோய் தோற்றம் பெற்றமை நாட்டின் தெங்குக் கைத்தொழிலுக்குச் சாத்தியமான அச்சுறுத்தலாக இருக்கக் கூடிய நிலையை உருவாக்கியுள்ளது. 18,109 தென்னை மரங்கள் இவ்வாண்டு அழிக்கப்பட்ட வேளையில் மேற்கூறிய நோயால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தாக்கு பிடிக்கக்கூடிய தென்னை வகைகளை அறிமுகப்படுத்தும் முதல் படிமுறையாக தென்னம் கன்றுகளைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒழுங்குமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாம் மரங்களை (Oil Palm) வளர்க்கும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உதவுவதற்கு தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தில் பாம் மர ஆராய்ச்சிக்கான புதிய பிரிவொன்று நிறுவப்பட்டது. இது சமையல் எண்ணெயின் கேள்விக்கும் வழங்கலுக்கும் இடையேயான இடைவெளியை நிரப்புவதற்குப் பாம் தாவரத்தின் பயிற்செய்கையை உள்நாட்டில் மேற்கொள்வதை ஊக்குவிக்கும். தெங்குப் பெருந்தோட்ட உதவித்தொகைத் திட்டத்துக்குத் தேவையான காணியின் குறைந்தபட்ச அளவு அரை ஏக்கரிலிருந்து கால் ஏக்கருக்குக் குறைக்கப்பட்டது. இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடையாளம் காணப்பட்ட 70,000 ஏக்கரில் தெங்குப் பயிற்செய்கையை அதிகரிக்கும் பொருட்டு கிளிநொச்சியில் நாற்று மேடையை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் தெங்குத்துறை அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் தெங்குத்துறை அபிவிருத்திக்காகப் புதிய அமைச்சை நிறுவியுள்ளது.

(i) தற்போது இலங்கையில் தெங்குச் செய்கை அபிவிருத்திகாகச் செயற்படும் நிறுவனங்கள் யாவை ?
(ii) பாம் மரங்களின் செய்கையைத் தாபிக்க நேரிட்டதன் காரணங்கள் யாவை ?
(iii) அண்மைக்காலங்களில் புதிய தெங்கு பேதங்களை அறிமுகப்படுத்தியமைக்கான மிக அண்மிய காரணம் யாது ?
(iv) தெங்குச் செய்கையில் விரைவான அபிவிருத்தியை எதிர்பார்க்கும் **இரண்டு** வலயங்களைப் பெயர் குறிப்பிடுக.
(v) தெங்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்காக அரசு பின்பற்றும் நடைமுறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

**5.** பின்வரும் பந்தியின் பொழிப்பை **ஒரு** வாக்கியத்தில் எழுதுக.

இன்று அநேகமான நாடுகள் செலவுச் சிக்கனமான முறையில் புதியதும் நவீனத்துவமுமான உற்பத்திகளைத் தயாரிப்பதற்கேற்ற விதத்தில் கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதில் நானோ தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி வருகின்றன. உதாரணமாக சாதாரணமான புடவை மற்றும் துணிகள், திரவங்களையோ அல்லது வேறு ஏதேனும் பொருட்களையோ ஈர்த்துக் கொள்ளாத முறையில் பழுது மற்றும் கறை படியும் தன்மைகளைத் தாங்கக்கூடிய புடவைகளாக மாற்றப்படுகின்ற அதேசமயம் தாமரை விளைவு என்று அறியப்படும் தாமரை மலரில் காணப்படும் மிக உயர்ந்த நீர் விலக்குத் திறனானது நானோ தொழில்நட்பத்தின் உதவியுடன் தீந்தைகளில் அபிவிருத்தி செய்யப்பட்டு கட்டடங்களின் சுவர்களில் நீர் மற்றும் தூசு என்பவை விலக்கப்பட்டு அவை நீண்ட காலம் சுத்தமாக இருப்பதை உறுதிப்படுத்தியது. அதே போன்று வானுயர்ந்த கட்டடங்களின் யன்னல்களைச் சுத்தப்படுத்துவதிலுள்ள சிரமமானது நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுயமாகவே சுத்தப்படுத்தக்கூடிய மேற்பரப்பில் தூசுக்களோ அல்லது வேறு ஏதேனும் துகள்களோ படியாத விதத்திலான கண்ணாடிகளைத் தயாரிப்பதன் மூலம் தீர்க்கப்பட்டது. இவை கைத்தொழில் துறையில் நானோ தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதற்குச் சில உதாரணங்களாகும்.

*(10 புள்ளிகள்)*

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

## இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை 2011(2012)

## Open / Limited Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Planning Service - 2011 (2012)

(05) விடயம் சார்ந்த அறிவு
Case Study

ஒரு மணித்தியாலம்
One hour

**எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

**1.** மாகாண சபையொன்றின் கீழுள்ள பிரதான அமைச்சொன்றின் திட்டமிடல் பிரிவின் தலைவராக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் எனக் கருதுங்கள். ஆளுனரின் தலைமையில் நடைபெறும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள உங்களுக்கு நேர்ந்துள்ளது. இக்கூட்டத்தின் போது மாகாண சபையின் கீழ் தற்போது செயற்படுத்தப்படுகின்ற எல்லாச் செயற்றிட்டங்களினதும் முன்னேற்றம் பற்றி மீளாய எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு உங்கள் அமைச்சின் கீழ் உள்ள மூன்று செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை முன்வைக்க வேண்டி உள்ள போதிலும் அதற்கு உங்களுக்குக் குறுகிய கால அவகாசமே தரப்பட்டுள்ளது. இந்நிலையைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு செயற்றிட்டம் தொடர்பான தகவல்கள் அடங்கும் சாராம்சத்தின் அட்டவணையொன்றைத் தயாரிக்க உங்களுக்கு நேரிட்டுள்ளது. அடிப்படை விடயங்களை நீங்கள் முன்வைக்கும் அதேசமயம் மூன்று செயற்றிட்டங்களினதும் விரிவான முன்னேற்றத்தைக் காட்ட உதவும் குறிப்பொன்றாக மேற்படி அட்டவணையைக் கூட்டத்தில் பங்குபற்றுபவர்கள் மத்தியில் விநியோகிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

(i) முன்னேற்ற மீளாய்வுக்கூட்டத்தில் மேற்படி செயற்றிட்டங்கள் தொடர்பாக உங்களால் முன்வைக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள் யாவை எனக் குறிப்பிடுங்கள். (10 புள்ளிகள்)

(ii) மூன்று செயற்றிட்டங்கள் தொடர்பாக மேலே இனங்காணப்பட்ட அடிப்படை விடயங்களைச் சாராம்சமாகத் தருவதற்குப் பொருத்தமான அட்டவணையொன்றைத் தயாரிக்க. (15 புள்ளிகள்)

(iii) மேற்படி கூட்டத்தில் வெளிநாட்டு உதவிகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய தேசிய மட்டத்திலுள்ள பல்வேறு நிறுவனங்களின் பணிக்கூறுகள் பற்றிய உங்களிடம் வினவ இடமுண்டு. வெளிநாட்டு உதவிகளின் கீழ் செயற்றிட்டங்களைச் செயற்படுத்தும்போது கடக்க வேண்டிய அடிப்படைச் செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன. மேற்படி ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய மட்டத்திலான நிறுவனத்தை/ நிறுவனங்களைப் பெயரிடுக. (இதற்கான விடையை உங்கள் விடைத்தாளில் எழுதுக.)

| | செயற்பாடு / ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு | பொறுப்பு வழங்கப்பட்டுள்ள நிறுவனம்/ நிறுவனங்கள் |
|---|---|---|
| (1) | செயற்றிட்டத்தை இனங்காணலும் விரிவான ஆலோசனைகளைத் தயாரித்தலும் | |
| (2) | செயற்றிட்ட ஆலோசனைகளின் நிதிசார், பொருளாதாரஞ் சார், சமூகஞ்சார் சாத்தியக்கூற்றைக் கணிப்பிடல் | |
| (3) | ஆரம்ப அங்கீகாரத்தைப் பெறல் | |
| (4) | கடன் வழங்கும் நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தை நடாத்துதல் | |
| (5) | உத்தேச வெளிநாட்டு நிதிக்கடன் ஊடாக நாட்டின் நிதி நிலைமைகளின் மீது ஏற்படும் செல்வாக்கைக் கணிப்பிடல் | |
| (6) | இறுதி அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல் | |
| (7) | கடன்/உதவி ஒப்பந்தங்கள் தொடர்பான சட்டரீதியான நிலைமைகள் பற்றிய அறிவுரைகளைப் பெற்றுக் கொடுத்தல் | a.<br>b. |
| (8) | அவற்றைச் செயற்படுத்தல் | |
| (9) | ஆய்வுகளும் மேற்பார்வையும் | a.<br>b. |
| (10) | இறுதி கணக்காய்வு வேலைகளை நடாத்துதல் | |

(20 புள்ளிகள்)

(iv) வெளிநாட்டு நிதிக்கடனின் கீழ் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்ற செயற்றிட்டங்களின் நிதி ரீதியான, பொருளாதார ரீதியான வாழ்தகவைத் (viability) தீர்மானிக்க அவற்றை முழுமையாக தெரிவிற்கு உட்படுத்தி மதிப்பிட வேண்டும். இதன்படி செயற்றிடமொன்றை கணிப்பிட பயன்படுத்தக்கூடிய நுட்பமுறைகள் **நான்கைக்** குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

(v) செயற்றிட்டமொன்றின் பிரதான செயற்பாடுகள், முடிவுகள், திடீர் விளைவுகள், நீண்ட கால பெறுபேறுகள், அவற்றை அளக்கப் பயன்படுத்தும் சுட்டிகள் ஆகியன முறைசார் முறையில் கீழே காட்டப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள அட்டவணையை உங்கள் விடைத்தாளில் பிரதி செய்து அதனைப் பயன்படுத்தி அவற்றை அந்தந்த குழுக்களாகத் தொகுக்க.

- ✳ உயர் விளைத்திறன் -
- ✳ தரமிக்க உயர் வாழ்க்கை நிலை
- ✳ எரிபொருளைச் சிக்கனப்படுத்தல்/ மீதமாதல்
- ✳ பயண நேரம் மீதமாதல்
- ✳ கொழும்பு நகரில் வாகன நெருக்கடி குறைந்து வாகனப் போக்குவரத்து சீரடைதல்
- ✳ தனி நபர் மொத்த தேசிய உற்பத்தி
- ✳ சொந்த வாகனம் உள்ள மக்களின் சதவீதம்
- ✳ கொழும்பு நகரில் வளி மாசடைதல் இழிவாதலும் வளியின் தரம் முன்னேற்றமடைதலும்
- ✳ கொழும்பு நகரில் மோட்டார் வாகனங்களின் சராசரி பயண வேகம் (மணிக்கு கி.மீ.)
- ✳ கொழும்பு நகரில் மோட்டார் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு விகிதம் (லீற்றருக்கு கி.மீ.)
- ✳ பம்பலப்பிட்டியிலிருந்து கோட்டை வரை பயணத்திற்கான சராசரி நேரம் (நிமிடங்களில்)
- ✳ கொழும்பு நகரில் வளியில் ஈயத்தின் அளவு
- ✳ கொழும்பு நகரில் விருத்தி செய்யப்பட்ட தன்னிச்சையாக இயங்கும் போக்குவரத்து சமிக்சை தொகுதிகளும் அவை நன்றாக இயங்குதலும்
- ✳ போக்குவரத்து நெருக்கடி மிக்க நேரங்களில் வாகனங்கள் நகரினுள் பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு முறையியல் செயற்படுதல்
- ✳ கொழும்பு நகரில் புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட 50 கி.மீற்றர் நீளமான பாதைகள்
- ✳ கொழும்பு நகரின் 50 கி.மீற்றர் தூரமான பாதைகளில் புதிதாக பாதுகாப்பு வேலிகள் கட்டப்படல்
- ✳ பாதை சமிக்கைகளைக் கடக்க எடுக்கும் நேரம் 10% ஆல் குறைதல்
- ✳ புதிதாக வேலி அமைக்கப்பட்ட பாதைகளின் பெயர்களும் அவற்றின் நீளங்களும் (கி.மீ.)
- ✳ வாகனங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள மணித்தியாலங்களில் நகரினுள் பிரவேசிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை
- ✳ 500 பொலிஸ் அலுவலர்களுக்கு போக்குவரத்து சட்டதிட்டங்கள் பற்றிய பயிற்சி வழங்கல்
- ✳ திருத்தியமைக்கப்பட்ட பாதைகளின் நீளம் (கி.மீ.)
- ✳ கொழும்பு நகரில் தன்னிச்சையாக இயங்கும் பாதை சமிக்கைத் தொகுதிகளை மேம்படுத்தல்
- ✳ அதிக போக்குவரத்து நெருக்கடியுள்ள மணித்தியாலயங்களில் கொழும்பு நகரின் பிரதான பாதைகளில் வாகன போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் முறையியல் ஒன்றுக்கான சட்டங்களைத் தயாரித்தல்
- ✳ கொழும்பு நகரில் பழுதடைந்த 50 கி.மீற்றர் பாதைகளைத் திருத்தியமைத்தல்
- ✳ கொழும்பு நகரில் போக்குவரத்து வாகன கடமைகளில் ஈடுபடுகின்ற பயிற்றப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை
- ✳ கொழும்பு நகரில் இனங்கண்ட பாதைகளின் இருமருங்கிலும் பாதுகாப்பு வேலிகளை உருவாக்கல்
- ✳ பயிற்சி பெற்ற 500 பொலிஸார் பாதை போக்குவரத்து வாகனக் கடமைகளில் ஈடுபடல்

| **நெடுநாளைய பெறுபேறுகள், உடனடி பெறுபேறுகள், முடிப்பு மற்றும் செயற்பாடுகள்** | **சுட்டி** |
|---|---|
| **நெடுநாளைய பெறுபேறுகள்**<br>1.<br>2. | <br>1.<br>2. |
| **உடனடி பெறுபேறுகள்**<br>1.<br>2.<br>3.<br>4. | <br>1.<br>2.<br>3.<br>4. |
| **முடிப்பு**<br>1.<br>2.<br>3.<br>4.<br>5. | <br>1.<br>2.<br>3.<br>4.<br>5. |
| **செயற்பாடுகள்**<br>1.<br>2.<br>3.<br>4.<br>5. | |

(45 புள்ளிகள்)

✳✳✳

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை 2011(2012)**

**Open / Limited Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Planning Service - 2011 (2012)**

**(06) திட்டமிடல்**

Planning

இரண்டு மணித்தியாலம்
Two hours

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. பின்வரும் சொற்றொடர்களை வரையறுத்துச் சுருக்கமாக விளக்குக.
   (i) வருடாந்த திட்டம் (Annual Plan) மற்றும் கூட்டிணைப்புத் திட்டம் (Corporate Plan)
   (ii) அபிவிருத்தித் திட்டம் (Development Plan) மற்றும் பௌதீகத் திட்டம் (Physical Plan)
   (iii) செயற்றிட்ட வட்டம் (Project Cycle) மற்றும் செயற்றிட்ட சாத்தியக்கூற்று ஆய்வு (Feasibility Study)
   (iv) தேறிய தற்போதைய பெறுமதி (NPV) மற்றும் உள்ளக வருவாய் விகிதம் (IRR)
   (v) நிதி ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

   *(05 × 5 = 25 புள்ளிகள்)*

2. (i) செயற்றிட்டத்தை அடையாளம் காணும் போது அதற்கு முக்கியமாகக் கொள்ளப்படும் அடிப்படைக் காரணிகள் யாவை ? *(10 புள்ளிகள்)*

   (ii) அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற செயற்றிட்ட முன்மொழிவொன்றில் அடங்க வேண்டிய அடிப்படை விடயங்கள் யாவை ? *(15 புள்ளிகள்)*

3. (i) "செயற்றிட்ட முன்னேற்றக் கண்காணித்தல் தொடர்பாக, "பெறுபேறுகளின் அடிப்படையிலான கண்காணித்தல்கள் மற்றும் மதிப்பாய்வு முறைகள் (Results Based Monitoring and Evaluation Method)" என்பவற்றின் முக்கியத்துவத்தைக் காட்டி இந்தப் பெறுபேறு அடிப்படையிலான கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு முறைகள் எவ்வாறு செயற்றிட்ட செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்குப் பயன்படுகிறது என்பதனை ஒரு பிரயோக உதாரணத்துடன் விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

   (ii) ஏதாவது நிறுவனங்களினால் / செயற்றிட்டத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற முன்னேற்ற அறிக்கையில் கருத்தில் கொள்ளப்படுகின்ற மூன்று மட்டங்களை உடைய நிறைவேற்று குறிகாட்டிகள் (Performance indicators) காணப்படுகின்றன. நிறைவேற்று குறிகாட்டிகளின் இந்த மூன்று மட்டங்கள் எவை உதாரணங்களுடன் விபரிக்குக. *(15 புள்ளிகள்)*

4. செயற்றிட்டம் அல்லது செயற்றிட்ட செயற்பாட்டின் தோல்விக்கும் காலதாமதத்திற்கும் முக்கியமான காரணிகள் எவை என இலங்கையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற வெளிநாட்டு நிதியீட்ட செயற்றிட்டங்களைத் தொடர்பு படுத்தி விவரிக்க. *(25 புள்ளிகள்)*

***